Nestlé Good food, Good life

# பத்திரிகை வெளியீடு

கொழும்பு, ஜனவரி 11, 2023

**நெஸ்லே லங்கா இலங்கை காலநிலை நிதியத்திடமிருந்து அதன் மேல்நிலை தேங்காய் மதிப்பு சங்கிலிக்கான காபன் அடிச்சுவடு சரிபார்ப்பு உறுதிப்படுத்தலைப் பெற்றுள்ளது**
*2050 க்குள் நிகர பூஜ்ஜிய உமிழ்வை அடைவதற்கான நிறுவனத்தின் பயணத்தில் அதற்கு உதவுகிறது*

நெஸ்லே லங்கா தனது குருநாகல் தொழிற்சாலையின் மூலப்பொருள் கையகப்படுத்தல் முதல் வரவேற்பு கருமபீடம் வரை தேங்காய் மதிப்பு சங்கிலி பகுப்பாய்வை வெற்றிகரமாக நிறைவுசெய்துள்ளதுடன், இலங்கை காலநிலை நிதியத்திடமிருந்து காபன் அடிச்சுவடு சரிபார்ப்பு உறுதிப்படுத்தலைப் பெற்று, அதன் மூலமாக மேல்நிலை தேங்காய் மதிப்புச் சங்கிலிக்கான சரிபார்ப்பு உறுதிப்படுத்தலை நிறைவு செய்த இலங்கையில் உள்ள முதல் நிறுவனமாகத் திகழ்கிறது. இப்பகுப்பாய்வின் பரிந்துரைகள், 2050 ஆம் ஆண்டுக்குள் நிகர பூஜ்ஜிய உமிழ்வை அடைவதற்கான அதன் பயணத்தில், நிறுவனத்தின் தேங்காய் மதிப்புச் சங்கிலியில் உமிழ்வை நடுநிலையாக்குவதற்கும், மீளுருவாக்க விவசாய நடைமுறைகளை நோக்கிச் செல்வதற்கும் ஒரு விரிவான வேலைத்திட்டத்தை வகுக்க வழிகாட்டியாகப் பயன்படுத்தப்படும்.

“இலங்கை காலநிலை நிதியம் போன்ற மதிப்பிற்குரிய நிறுவனத்திடமிருந்து காபன் அடிச்சுவட்டு சரிபார்ப்பு உறுதிப்படுத்தலைப் பெற்றிருப்பது ஒரு பெரும் பாக்கியம் என்பதுடன், இது பூமிக்கு நல்லது செய்வதில் எங்களின் ஓயாத அர்ப்பணிப்புக்கு சான்றாக உள்ளது. தேங்காய் எங்களின் முக்கிய சேர்க்கைப் பொருட்களில் ஒன்றாக இருப்பதால், இந்த சரிபார்ப்பு உறுதிப்படுத்தல், எங்கள் நிகர பூஜ்ஜிய பயணத்தில் ஒரு குறிப்பிடத்தக்க சாதனை இலக்காகும். இது எங்கள் தேங்காய் மதிப்பு சங்கிலியில் உமிழ்வை மேலும் குறைக்க உதவுகிறது. நாம் வணிகத்தை முன்னெடுக்கின்ற விதத்தில் நிலைபேற்றியல் என்பது உட்பொதிந்துள்ளது. ‘நல்லுணவு, நல்வாழ்வு’ என்ற எங்கள் வாக்குறுதியை நிறைவேற்ற, பண்ணை முதல் உணவு மேசை வரை, எங்களுடன் தொடர்புபட்ட அனைத்துத் தரப்பினருடனும் சேர்ந்து, நிகர பூஜ்ஜியத்தை நோக்கிய முயற்சிகளை துரிதப்படுத்துகிறோம். இந்த நோக்கத்திற்காக, நாங்கள் எமது ஏனைய மதிப்புச் சங்கிலிகளுக்கும் இதே போன்ற பகுப்பாய்வுகளை நடத்துவோம்,” என்று நெஸ்லே லங்காவின் முகாமைத்துவப் பணிப்பாளரான திரு. ஜேசன் அவன்சென்யா அவர்கள் தெரிவித்தார்.

நாட்டில் தேங்காய்ப் பால் மாவை அதிகளவில் ஏற்றுமதி செய்யும் பாரிய நிறுவனங்களில் ஒன்றாக, நெஸ்லே லங்கா இலங்கையின் சமூக-பொருளாதார மேம்பாட்டிற்கு பங்களித்து வருவதுடன், உள்நாட்டு தேங்காய் தொழில்துறையை மேம்படுத்த உதவி, விவசாய சமூகங்களுக்கு நிலைபேற்றியல் கொண்ட வாழ்வாதாரத்தை தோற்றுவிக்கிறது. 1986 ஆம் ஆண்டு மெகி அசல் தேங்காய் பால் மா அறிமுகப்படுத்தப்பட்டதில் இருந்து, நிறுவனம் 8,000 க்கும் மேற்பட்ட உள்நாட்டு தேங்காய் செய்கையாளர்களின் வாழ்வாதாரத்திற்கு உதவியுள்ளது. உலகளவில் 50 க்கும் மேற்பட்ட நாடுகளில் விற்கப்படுகின்ற மெகி அசல் தேங்காய்ப் பால் மாவை உற்பத்தி செய்வதற்காக, 2021 ஆம் ஆண்டில், இந்நிறுவனம் 94 மில்லியனுக்கும் அதிகமான தேங்காய்களை கொள்முதல் செய்து, ரூபா. 6 பில்லியன் தொகையை உள்நாட்டு தேங்காய் தொழில்துறைக்கு பங்களிப்புச் செய்து, அவற்றின் ஏற்றுமதி மூலமாக அந்நிய செலாவணியை ஈட்டுவதிலும் பங்களித்துள்ளது.

நாட்டின் ஏற்றுமதித் துறையில் நெஸ்லே லங்காவின் குறிப்பிடத்தக்க பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில், இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட 24 வது ஜனாதிபதி ஏற்றுமதி விருதுகளில், 2019/2020 மற்றும் 2020/2021 நிதியாண்டுகளுக்கான தேங்காய் விதைகள் துறையில் மிகச் சிறந்த ஏற்றுமதியாளர் என்ற விருதை நிறுவனம் பெற்றது.

‘தற்போதைய மற்றும் எதிர்கால தலைமுறைகள் என அனைவரதும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு உணவின் ஆற்றலை வெளிக்கொண்டு வருதல்’ என்ற அதன் நோக்கத்தால் உந்தப்பட்டு, நெஸ்லே நிறுவனம் இலங்கையில் தலைமுறை தலைமுறையாக இளமை முதல் முதுமை வரை உயர்தர உணவு மற்றும் பான வகைகள் மூலம் ஊட்டமளித்துள்ளது. 1906 ஆம் ஆண்டு இலங்கையில் தனது செயற்பாடுகளை ஆரம்பித்து, இன்று, நெஸ்லே இலங்கை மக்களின் வாழ்க்கையின் ஒரு அங்கமாக மாறியுள்ளது. 25,000 க்கும் மேற்பட்ட இலங்கை பால் உற்பத்தி மற்றும் தென்னை விவசாயிகள் மற்றும் வீடுகளில் தென்னை வளர்ப்பவர்களுக்கு அவர்களின் வாழ்வாதாரத்திற்கு பங்களித்து வருவதுடன், 800 க்கும் மேற்பட்டவர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பினை வழங்கியுள்ளது. கடுமையான பாதுகாப்பு மற்றும் தரக் கட்டுப்பாடுகளைப்

பயன்படுத்தி, குருநாகலிலுள்ள தனது அதிநவீன தொழிற்சாலையில், இலங்கையில் விற்பனை செய்யப்படும் 90% க்கும் அதிகமான தயாரிப்புகளை உற்பத்தி செய்கிறது.

---


| | | | |
|---|---|---|---|
| நிறுவன பொது விவகாரங்கள் | தமித்த குலதுங்க | +94777915949 | Damitha.Kulatunga@lk.nestle.com |
| நிறுவன தொடர்பாடல்கள் | இசுரி அழகக்கோன் | +94760395781 | Isuri.Alahakoon@lk.nestle.com |